TAMIL NADU OPEN UNIVERSITY ★ VICE-CHANCELLOR ★ 0 1 MAR 2021
STUDENT SUPPORT SERVICES DIVISION TNOU CHENNAI-600 015 Dt. 2/3/21 357
TAMIL NADU OPEN UNIVERSITY ★ REGISTRAR OFFICE ★ 0 1 MAR 2021

**சுருக்கம்**

உயர்கல்வித் துறை – 2019–20 ஆம் ஆண்டு மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு – 91 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகத்தின் கற்போர் மையங்கள் நிறுவியமை – கூடுதலாக 41 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தமிழ்நாடு திறந்த நிலை பல்கலைக்கழகத்தின் கற்போர் உதவி மையங்கள் மற்றும் தேர்வு மையங்கள் நிறுவுவது – நிர்வாக ஒப்பளிப்பு – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வித் (கே1)துறை

அரசாணை (நிலை) எண்.48

நாள் 25.02.2021
சார்வரி வருடம் , மாசி 13
திருவள்ளுவராண்டு 2052

படிக்க:-

1. 2019–20 ஆம் ஆண்டு உயர்கல்வித் துறை மானியக் கோரிக்கை எண்.20, மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு, நாள் 02.07.2019.
2. அரசாணை (நிலை) எண். 150, உயர்கல்வித் (கே1) துறை, நாள் 23.10.2020.
3. பதிவாளர், தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகம் அவர்களின் கடித எண். த.நா.தி.நி.ப.க/செ.ம.மை/2020/003, நாள் 04.01.2021.

------

**ஆணை:**

02.07.2019 அன்று 2019–20 ஆம் ஆண்டிற்கான உயர்கல்வித் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின்போது, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களால் ஏனையவைகளுடன் பின்வரும் அறிவிப்பும் வெளியிடப்பட்டது :–

> "தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகம் துவங்கப்பட்டதிலிருந்து மிகக்குறைந்த செலவில் சமூகத்திற்குத் தேவையான படிப்புகளை தொலைநிலைக்கல்வி மற்றும் திறந்தநிலைக்கல்வி மூலம் வழங்கி வருகின்றது. பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் நெறிமுறைகளின்படி, கிராமப்புறம் மற்றும் ஏழ்மை நிலையிலுள்ள மக்கள், குறிப்பாக மாணவிகளுக்கு உயர்கல்வி வாய்ப்பினைக் குறைந்த செலவில், உயர்ந்த தரத்தில் வழங்கும் பொருட்டு, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்தின் கற்போர் உதவி மையங்கள் மற்றும் தேர்வு மையங்கள் நிறுவப்படும். இம்மையமானது ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்."

. . . 2

2. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்பிற்கிணங்க, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 91 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்தின், கற்போர் உதவி மையங்கள் மற்றும் தேர்வு மையங்களை, ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவுவதற்கு தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கி ஆணைகள் வெளியிடப்பட்டன.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட பதிவாளர், தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகம் அவர்களின் கடிதத்தில் அரசாணை (நிலை) எண். 36, உயர்கல்வித் (ஜி1) துறை, நாள் 29.02.2019 மற்றும் அரசாணை (நிலை) எண். 184, உயர்கல்வித் (ஜி1) துறை, நாள் 11.12.2020-ன்படி 41 பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளாக மாற்றம் செய்து, ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன என்றும், அதன்படி மாற்றம் செய்யப்பட்ட மேற்கண்ட கூடுதல் அரசு கல்லூரிகளிலும் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் கற்போர் உதவி மையங்கள் மற்றும் தேர்வு மையங்கள் அமைப்பதற்கு அனுமதி வழங்குமாறு கோரியுள்ளார்.

4. மேற்கண்ட தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழக பதிவாளரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்பிற்கிணங்க, மேற்கண்ட அறிவிப்பினை செயல்படுத்துவதற்கான செலவினம், பல்கலைக்கழக நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் என்ற நிலையில் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளாக இருந்து, தற்போது அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளாக மாற்றம்செய்யப்பட்டுள்ள 41 கல்லூரிகளில், தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்தின் கற்போர் உதவி மையங்கள் மற்றும் தேர்வு மையங்களைக் கூடுதலாக நிறுவுவதற்கு தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கலாம் என முடிவு செய்து, அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அபூர்வா
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
பதிவாளர், தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை-15
கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை-6.
மாநில (குணிக்கை-1) கணக்காயர், சென்னை-18
உள்உறை கணக்காயர், மாநில கணக்காயர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை-9.
<u>நகல்:</u>
உயர்கல்வித் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
உயர்கல்வித் துறை செயலாளரின் தனிச் செயலர், சென்னை-9.
இ.கோ / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

25/02/2021
பிரிவு அலுவலர்
25/2/21